**செய்தி வெளியீடு எண்: 105** **நாள்: 18.02.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் இந்தியா டுடே குழுமத்தின் மேலாண்மை ஆசிரியர் திரு. ராஜிவ் பை அவர்கள் சந்தித்து, இந்தியா டுடே குழுமத்தின் சார்பில் தேசிய அளவில் வழங்கப்படும் விருதுகளில், பத்தாண்டுகளில் மிக முன்னேறிய மாநிலம் என்ற வரிசையில் தமிழ்நாட்டிற்கு இரண்டாவது இடம் கிடைத்து இருப்பதாகவும், பெரிய மாநிலங்களில் வேளாண்மைத் துறையில் தமிழ்நாட்டிற்கு முதல் இடம் கிடைத்து இருப்பதாகவும் தெரிவித்து அதற்கான விருதுகளை நேரில் வழங்கினார்.

இந்திய டுடே குழுமத்தின் சார்பில் ஆண்டுதோறும் தேசிய அளவில் பல துறைகளில் சிறந்த மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பத்தாண்டுகளில் இந்தியாவில் மிகவும் முன்னேறிய மாநிலம் என்ற வரிசையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும், வேளாண்மைத் துறையில் பெரிய மாநிலங்களுக்கிடையே தமிழ்நாடு முதல் இடத்தையும் 2012 ஆம் ஆண்டு பெற்று இருக்கிறது. இரண்டாவது மிகவும் முன்னேறிய மாநிலத்திற்கான (Second Most Improved State of the Decade) விருதினையும், மற்றும் வேளாண்மைத் துறையில் பெரிய மாநிலங்களுக்கிடையேயான சிறந்த மாநிலம் என்ற விருதினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இந்தியா டுடே குழுமத்தின் மேலாண்மை ஆசிரியர் திரு. ராஜிவ் பை அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்தியா டுடே குழுமத்தின் சிறந்த நகரத்திற்கான விருது வழங்கும் விழா 22.2.2013 அன்று புது டெல்லியில் நடைபெறவுள்ளதாகவும், கல்வி மற்றும் ஒட்டுமொத்த துறைகளில் சிறந்த நகரமாக சென்னையும், கல்வி மற்றும் சுற்றுச்சூழலில் வளர்ந்து வரும் சிறந்த நகரமாக மதுரையும், முதலீட்டை ஈர்ப்பதில் வளர்ந்து வரும் சிறந்த நகரமாக கோயம்புத்தூரும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்து, இந்தப் பரிசுகளை நேரில் பெற்றுச் செல்ல மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அனுப்பி வைக்குமாறு இந்தியா டுடே குழுமத்தின் மேலாண்மை ஆசிரியர் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்தியா டுடே குழுமத்தின் மேலாண்மை ஆசிரியரின் வேண்டுகோளினை ஏற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. நத்தம் இரா. விசுவநாதன் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி ஆகியோரை அனுப்பி வைப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 18.2.2013